13-21
செப்டம்பர் 2025
சனிக்கிழமை
கோயம்புத்தூர்

# தின இதிகை

DINA IDHIGAI
TAMIL WEEKLY
NEWSPAPER

வார இதழ்
விலை ரூ.5
8 பக்கங்கள்

Vol. No.1 - Issue No. 2 | RNI : TNTAM/25/A1547 | www.dinaidhigai.com | Price Rs.5/-



# கோவையில் ஜுவல் ஒன் மாரத்தான் 2025 துவக்கம்




● கோவை

"ஒரு ஓட்டம், ஒரு மாற்றம்" என்ற கருத்தை முன்னிறுத்தி போதை யில்லா சமூகத்தை உருவாக்கும் நோக்கத்துடன், எமரால்டு மருத்துவ நல மையம் மற்றும் கிரிஷா அறக்கட்டளை ஆதரவு டன் இணைந்து நடைபெறும், "ஜுவல் ஒன் மாரத்தான் 2025" அக்டோபர் 5, ஞாயிற்றுகிழமை, மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள,தொப்பம்பட்டி பிரிவு, எமரால்டு கிரவுண்டில் நடைபெற உள்ளது.

மாரத்தானில் வெற்றி பெறு பவர்களுக்கு, மொத்தம் ரூ.3 லட்சம் வரையிலான பரிசுத் தொகை வழங்கப்பட உள்ளது. பங்கேற்க விரும்புவோர், நிர்ண யிக்கப்பட்ட பதிவுக்கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யலாம்.

**பதிவுக் கட்டணம்**

3 கிமீ – ரூ.499, 5 கிமீ – ரூ.499, 10 கிமீ – ரூ.599 (குழு பதிவாளர் களுக்கு 10 % சலுகைவழங்கப் படுகிறது)–(20 நபர்கள் மட்டும்)

**பரிசுத் தொகை விபரம்:**

10 கிமீ (பொது பிரிவு): முதல் பரிசு – ரூ.30,000, இரண்டாம் பரிசு – ரூ.20,000, மூன்றாம்பரிசு – ரூ.10,000.

10 கிமீ ( 45 வயதுக்கு மேல்) : முதல்பரிசு – ரூ.15,000,இரண்டாம் பரிசு – ரூ.10,000, மூன்றாம் பரிசு – ரூ.5,000,

5 கிமீ: முதல் பரிசு – ரூ.15,000, இரண்டாம் பரிசு – ரூ.10,000, மூன்றாம் பரிசு – ரூ.5,000,

3 கிமீ: சமூக நலனுக்கான ஓட்டமாக கருதப்படும். ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் தனித்தனியாக பரிசுத் தொகை கள் வழங்கப்பட உள்ளன. பங்கேற் பவர்களுக்கு, டி–சர்ட், மெடல், இ–சான்றிதழ், காலை உணவு, தண்ணீர்மையம், மீட்புமையவசதி, செல்ஃபி பூத், தமிழ் கலாச்சார நிகழ்ச்சிகள், ஸும்பா (Zumba), DJ போன்றவையும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. எனவே மக்கள் அனைவரும், இந்த மாரத்தானில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் விபரங்களுக்கு, தொர்பு கொள்ள வேண்டிய எண்கள் : 73971 11147, 99521 99954, 93455 00928



## பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 C மாவட்டம் சார்பில்

# ஆசிரியர் தின விழா கொண்டாட்டம்

● கோவை

பன்னாட்டுலயன்ஸ்சங்கங்கள்சார்பில், சமூக நலன் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளவர் களை ஊக்குவிக்கும் வகையில் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கோவை மண்டல பகுதியில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் விருது வழங்கும் விழா ஆவாரம்பாளையம், கோ இந்தியா அரங்கில் நடைபெற்றது.

ஆசிரியர் தின விழா குழு மாவட்டத் தலைவர் ஸ்ரீராம் பிரபு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மண்டலத் தலைவர் வல்பூர் சாமி, ஜி.எஸ்.டி ஒருங்கிணைப்பாளர் மற்றும் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசிய செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் விழாவை ஒருங்கிணைத்து நடத்தினர்.

சிறப்பு விருந்தினராக 3242 C மாவட்ட ஆளுநர் ராஜசேகர் கலந்து கொண்டு, ஆசிரியர்களுக்கான தின விழாவை தொடங்கி வைத்தார்.

தலைமை விருந்தினராக அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலகுருசாமி கலந்துகொண்டு, ஆசிரியர் களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 C மாவட்டம் முதல் துணை ஆளுநர் செல்வராஜ், இரண்டாம் துணை ஆளுநர் சூரிய நந்தகோவில், முன்னாள் ஆளுநர் டாக்டர் பழனிச்சாமி, ராம்குமார் கருணாநிதி, மாவட்ட அமைச்சரவை செயலாளர் ரவிசங்கர், ஜி.எஸ்.டி ஒருங்கிணைப்பாளர் பாஸ்கர், RDC Hunger Relief MJF Dr D Karnan மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# அக்டோபர் 1 முதல் யுபிஐ சேவையில் மாற்றம்!

தினசரி வாழ்க்கையில் யுபிஐ பயன்பாடு அதிகரித்துள்ளது இந்தியாவில் யுபிஐ மூலமாக பணப்பரிவர்த்தனை செய்வோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கிராமப்புறங்களிலிருந்து நகரங்கள் வரை பெரும்பாலான இடங்களில் மக்கள் யுபிஐயை பயன்படுத்தி வருகின்றனர். சிறு பரிவர்த்தனை கூட யுபிஐ சேவை மூலம் பயன்படுத்தும் வழக்கத்திற்கு மக்கள் பழகி விட்டனர் .

இது மக்களுக்கு சுலபமாக இருந்தாலும் அதிக அளவில் மோசடிகள் நடப்பதால்அரசாங்கமும் மோசடிகளை தடுக்க பலவகையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த வரிசையில் வரும் அக்டோபர் மாதம் முதல் நடைமுறைக்கு வர உள்ள சில மாற்றங்களை நேஷனல்பேமெண்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா புதிய விதிகளை அறிவித்துள்ளது.




**அக்டோபர் 1_ம் தேதி முதல் கலெக்ட் ரெக்வஸ்ட் நீக்கம்!**

அக்டோபர் 1 முதல், ஒரு நபர் மற்றொரு நபருக்கு "யுபிஐ கலெக்ட் ரிக்குவெஸ்ட்" அனுப்ப முடியாது என நேஷனல் பேமெண்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா தெரிவித்துள்ளது. முன்னர், யுபிஐ செயலியில் ஒருவரின்எண் அல்லது யுபிஐ ஐடியை பயன்படுத்தி தொகையைக் குறிப்பிட்டு பணம் பெறுவதற்கான ரெக்வஸ்ட் அனுப்பும் வசதி இருந்தது. இதனை இனி பயன்படுத்த முடியாது. அதாவது அறிமுகம் இல்லாத நபர் பணம் பெறுவதற்கான ரெக்வஸ்ட் அனுப்பும் வசதி கிடைக்காது.

உதாரணமாக, நண்பர்கள் தாங்கள் செலவு செய்தத் தொகையை பிரித்துக் கொள்ளவோ அல்லது கடன் வாங்கியப் பணத்தைத் திரும்பப் பெறுமாறு நினைவூட்டவோ இந்த அம்சம் பயன்பட்டது. இந்த அம்சம், மோசடி செய்பவர்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. அப்பாவி பயனர்களுக்கு போலியான பணப் பரிவர்த்தனை கோரிக்கைகளை அனுப்பி, அதை ஏற்கச் செய்து ஏமாற்றுவது அதிகரித்து வந்த நிலையில் இந்தத் திட்டம் அமலுக்கு வர இருக்கிறது.

ஆனால் உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினரின் யுபிஐ ஐடியை உள்ளீடு செய்தோ அல்லது கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்தோ பணம் அனுப்பலாம். வணிகர்கள்,வணிக நிறுவனங்கள்,இ–காமர்ஸ் செயலிகள் போன்றவைகளுக்கு மட்டும் கலெக்ட் ரிக்குவெஸ்ட் அனுப்பும் வசதி தொடர்ந்து இருக்கும் என தெரிவித்துள்ளது .



# சரவணம்பட்டியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்

● கோவை

அரசுத் துறைகளின் சேவைகளை, மக்களின் இல்லங்களுக்கு அருகே சென்று வழங்கும் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தின் கீழ் கோவையில் முகாம்கள் மாவட்ட மற்றும் மாநகர பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.11 மற்றும் 21–க்குட்பட்ட மக்கள் பயனடையும் படி இந்த முகாம் 9.9.25 அன்று சரவணம்பட்டி, சத்தி சாலையில் அமைந்துள்ள குளோபஸ் நிலையத்தில் நடைபெற்றது.

வடக்கு மண்டலத்தலைவர் வே.கதிர்வேல், மாமன்ற உறுப்பினர்கள் பூங்கொடி சோம சுந்தரம் மற்றும் பழனிசாமி (எ) சிரவை சிவா, உதவி ஆணையர் முத்துசாமி, உதவி செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் முகாமில் கலந்துகொண்டனர்.

கோவை மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளுக்கு உடனடி ஆணையினை வழங்கினார்.



● ஆசிரியர்கள் தினத்தை முன்னிட்டு, சிறந்த ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாக சமூக சேவையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு Life of Autism Trust சார்பாக விருது வழங்கி பாராட்டு தெரிவித்தது

## கணபதி ஹலோ கிட்ஸ் கிங்ஸ்டன் பள்ளியில் சுதந்திர தின விழா

● கோவை

ஆகஸ்ட் 15 இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு, கணபதி HelloKids – Kingsston மழலையர் பள்ளியில் சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில், சிறுவர்கள் தேசிய தலைவர்களின் வேடமணிந்து கலந்துகொண்டனர். மேலும், பல்வேறு போட்டிகளில் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.போட்டி களில் சிறந்து விளங்கிய மாணவர் களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



## முதலமைச்சர் கோப்பைக்கான ஹேண்ட்பால் போட்டி

# பி.எஸ்.ஜி. கல்லூரி அணியை வீழ்த்தி முதல் பரிசை தட்டிச்சென்ற கற்பகம் அகாடமி

● கோவை

கோவை மாவட்டத்தில் அமைந் துள்ள கற்பகம் அகாடமியில் முதலமைச்சர் கோப்பைக்கான ஹேண்ட்பால் போட்டிகள் சமீபத்தில் நடைபெற்றது.

30க்கும் அதிகமான அணிகள் பங்கேற்ற இந்த போட்டியின் காலிறுதியில் கற்பகம் அகாடமி அணி கலைஞர் கருணாநிதி தொழில்நுட்பக் கல்லூரி அணியை எதிர்கொண்டு வெற்றி பெற்றது.

இதற்கு அடுத்ததாக நடந்த அரையிறுதியில் நேரு கல்லூரி அணியை எதிர்கொண்ட கற்பகம் அகாடமி, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிப் பெற்றது . இறுதி ஆட்டத்தில் கற்பகம் அணியுடன் மோதிய கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணியை 36–27 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி கற்பகம் அணி முதல் பரிசு பெற்றது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு கற்பகம் அகாடமியின் துணை வேந்தர் ரவி, பதிவாளர் பிரதீப், உடற்கல்வி இயக்குனர் சுதாகர், பயிற்சியாளர் ராமச்சந்திரன் உள்ளிட்டோர் பாராட்டினார்.



13-21
செப்டம்பர் 2025
சனிக்கிழமை
கோயம்புத்தூர்

# தின இதிகை

DINA IDHIGAI
TAMIL WEEKLY
NEWSPAPER

வார இதழ்
விலை ரூ.5
8 பக்கங்கள்

Vol. No.1 - Issue No. 2 | RNI : TNTAM/25/A1547 | www.dinaidhigai.com | Price Rs.5/-




## செங்கோட்டையாரின் ஒன்றிணைப்பு முயற்சியும், எடப்பாடியாரின் நகர்வும்..

### அதிமுக வின் தற்போதைய நிலவரம்



● கோவை

சில மாதங்களாகவே, முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாக செய்திகள் வந்த வண்ணம் இருந்தது. இந்த நிலையில், எடப்பாடி பழனிச்சாமிக்கு விவசாயிகள் நடத்திய பாராட்டு விழாவில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா படம் இடம் பெறவில்லை என்று செங்கோட்டையன் குற்றம் சாட்டியது பரபரப்பை கிளப்பியது. மேலும், செப்டம்பர் 5ம் தேதி கோபிசெட்டிபாளையம் அதிமுக அலுவலகத்தில், நான் மனம் திறந்து பேசப் போகிறேன் என ஈரோட்டில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

செப்டம்பர் 5ம் தேதி செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், ஆட்சி மாற்றத் திற்கு அதிமுக ஒன்றிணைய வேண்டும். அதிமுகவைவிட்டு ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள முக்கிய தலைவர்களை மீண்டும் இணைக்க வேண்டும் என்றும் , இதை ஏற்கனவே நான், நத்தம் விஸ்வநாதன், வேலுமணி, தங்கமணி, அன்பழகன், சி.வி. சண்முகம் ஆகியோர் பொதுச் செயலாளரை சந்தித்துக் கூறினோம், ஆனால் அவர் அதை ஏற்கும் மனநிலையில் இல்லை, வெளியில் சென்றவர்களை அரவணைத்தால்தான் நம்மால் வெல்ல முடியும் என்பது எம்.ஜி.ஆர் சொல்லிக் கொடுத்த பாடம் என்றுக் கூறினார்.

மேலும் வெளியில் சென்றவர்களை பத்து நாட்களுக்குள் இணைக்கும் முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும், இல்லையெனில் என்னை போன்ற மனநிலையில் உள்ளவர் கள் அனைவரும் ஒன்றிணைந்து அதற்கான பணிகளை மேற்கொள்வோம் எனவும் கூறினார். செங்கோட்டையனுக்கு ஆதர வாக கோபிசெட்டிபாளையம் அதிமுக அலுவலகத்தில் 1000 திற்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர். அதே போல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சத்யபாமாவும், செங்கோட்டையனுக்கு ஆதரவு தெரிவித்து தன் பதவியை ராஜினாமா செய்தார்.

இந்நிலையில், தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் எடப்பாடி பழனிச்சாமியை திண்டுக்கல்லில், கே.பி. முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், எஸ்.பி. வேலுமணி ஆகியோர் சுமார் 1 மணி நேரம் ஆலோசனையில் ஈடுபட்டனர், பின்னர் அதிமுக –வின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நீக்கப்படுவதாக அறிவித்தித்தார் எடப்பாடி பழனிச்சாமி. செங்கோட்டையனின் இந்த ஒருங்கிணைப்பு முயற்சிக்கு ஓபிஎஸ், டிடிவி தினகரன், சசிகலா ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர். இந்நிலையில் செங்கோட்டையன், மன அமைதி பெற ஹரித்வார் போவதாக கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறினார். ஆனால் உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்திக்க நேரம் கிடைத்ததால் டெல்லி சென்றார்,பின்னர் நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமன் ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்

டெல்லியில் இருந்து தமிழகம் திரும்பிய செங்கோட்டையன் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த போது, ஹரித்வார் செல்வதாக கூறினேன். டெல்லியில் அமித்ஷாவை சந்திக்க அனுமதி கிடைத்தது, சந்தித்து பேசினேன், வெளியில் சென்ற தலைவர்கள் அனைவரையும் ஒருங் கிணைக்கவேண்டும்,கட்சியை மேலும் வலுப் படுத்த வேண்டும் என்று பேசினேன். இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றிய கருத்துக்களையும் பரிமாறினோம் எனக் கூறினார். அதிமுக என்பது மிகப் பெரிய இயக்கம், இம்மாதிரியான சூழ்நிலைகளை ஏற்கனவே பல தடவை சந்தித்துள்ளது. இது ஒன்றும் புதிதல்ல, இதில் இருந்து மீண்டு தமிழகத்தில் ஆட்சிக் கட்டிலில் அமரும் என அதிமுகவின் தொண்டர்கள் தெரிவித்து வருகின்றனர்.

### செப்டம்பர் 22, 2025 முதல்

## அமலுக்கு வரும் திருத்தப்பட்ட புதிய ஜி.எஸ்.டி விபரங்கள்




● டெல்லி

கடந்த ஆகஸ்டு 15, சுதந்திர தினத்தன்று, பாரத பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களிடம் உரையாற்றிய போது, தீபாவளிக்குள் அடுத்த தலைமுறை ஜி.எஸ்.டி சீர்திருத்தங்கள் வெளியிடப்படும் என்றும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரிகள் குறைக்கப்பட்டு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நடத்துபவர்கள், உள்ளூர் விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதற்கேற்ப, கடந்த செப்டம்பர் 03ஆம் தேதி, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 56–வது ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில், திருத்தப்பட்ட புதிய ஜி.எஸ்.டி பட்டியல் வெளியிடப் பட்டது. அதில், தற்போதுள்ள 5%, 12%, 18% மற்றும் 28% ஜி.எஸ்.டி அடுக்குகளில் இருந்து 12% மற்றும் 28% அடுக்குகள் நீக்கப்பட்டுள்ளன. அதேவேலையில், ஆடம்பர பொருட்கள் மற்றும் புகையிலை பொருட்களுக்கு புதியதாக 40% அடுக்கு அறிமுகப்படுதப்பட்டுள்ளது. இந்த திருத்தப்பட்ட ஜி.எஸ்.டி வரும் செப்டம்பர் 22, 2025 முதல் நடைமுறைக்கு வர உள்ளது.

#### புதிய மற்றும் பழைய ஜி.எஸ்.டி விகிதங்கள்

**0 சதவீதம்**

UHT (Ultra High Temperature) பால், பன்னீர், சென்னா, பீட்ஸா, ரொட்டி, சப்பாத்தி பரோட்டா உள்ளிட்ட இந்திய ரொட்டிகள் தனிநபர் ஆயுள், டேர்ம் மருத்துவ காப்பீடு 33 உயிர் காக்கும் மருந்துகள் 3 புற்று நோய் மருந்துகள் (பழைய விகிதம் : 5%, 18%, 12%)

**8 சதவீதம்**

டிவி, ஏசி, மானிட்டர்(பழைய விகிதம் 28%)

**5 சதவீதம்**

இனிப்புகள், சாக்லேட், பேக்கரி பொருட்கள், பிஸ்கட், ஐஸ்கிரீம், காபி பொடி, நூடுல்ஸ், பாஸ்தா, தலைமுடி எண்ணெய், டூத் பேஸ்ட், பிரஷ், டாய்லெட் சோப்பு, கழிவறை பொருட்கள் உளர் பழங்கள், நட்ஸ், வெண்ணெய், நெய், சீஸ், மிக்சர், ஸ்னாக்ஸ், தண்ணீர் பாட்டில், இறைச்சி, மீன், இறால் பேபி டைப்பர், சீப்பு, ஹேர் பின் பாத்திரங்கள், சோலார் வாட்டர் ஹீட்டர் கண் கண்ணாடி, பரிசோதனை உபகரணங்கள், ஆக்ஸிஜன் டிராக்டர், பூச்சி விரட்டி, சொட்டு நீர் தெளிப்பான், விவசாய இயந்திரங்கள், கிரானைட் பிளாக், ஹோட்டல் ரூம் (ரூ.7500 வரை) கையால் நெய்யப்பட்ட சால்வை, தரைவிரிப்பு, காலணி (ரூ.2500 க்கு கீழ்) சினிமா டிக்கெட் (ரூ.100 வரை) இதர மருந்துகள் (பழைய விகிதம் : 18%, 12%)

**18 சதவீதம்**

350சிசி க்கு குறைவான டூ–வீலர்கள், 1500சிசி க்கு குறைவான 4 மீட்டருக்கு குறைவான சிறிய ரக கார்கள், பஸ், சரக்கு வாகனங்கள், ஆட்டோ மற்றும் வாகன உதிரி பாகங்கள். சிமெண்ட் ஊதுபத்தி ஆடைகள் (ரூ.2500–க்கு மேல் ) ( பழைய விகிதம் : 28%, 12% )

**40 சதவீதம்**

350சிசி க்கு மேலான டூ–வீலர்கள் 1200சிசி க்கு மேல், 4 மீட்டருக்கு அதிகமான கார்கள் எஸ்.யூ.வி கார்கள் குளிர்பானங்கள், கஃபைன் பானங்கள், சிகரெட், புகையிலை பொருட்கள், துப்பாக்கி, ஐ.பி.எல். டிக்கெட் ( பழைய விகிதம் 31%, 43%, 50%, 28%)



## நேபாளத்தில் கலவரம்
### அரசு நிர்வாகம் ராணுவ வசமானது

● காத்மாண்டு

நேபாளத்தில் ஆட்சியாளர்கள் செய்த ஊழல், மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி, மக்கள் சமூக வலைத்தளங்களில் ஊழல் ஒழிப்பு பிரச்சாரங்களை பரப்பி வந்தனர். இது நேபாள அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதால், சமூக வலைத்தளங்கள் மீது அரசு தடை விதித்தது. தடை விதித்ததை எதிர்த்து 'ஜென் சீ' என்ற குழு இளைஞர்கள் போராட்டத்தில் இறங்கினர், போராட்டம் தீவிரம் அடைந்ததை அடுத்து பிரதமர் சர்மா ஒலி, ஜனாதிபதி அடுத்தடுத்து ராஜினாமா செய்தனர். நிலைமையைக் கட்டுப்படுத்த நேபாளத்தின் பாதுகாப்புக்கான பொறுப்பை அந்நாட்டு ராணுவம் ஏற்றுள்ளது.




## எமரால்டு நிறுவனத்தின் கிரிஷா அறக்கட்டளை சார்பாக அரசு பள்ளிக்கு ரூ.30 லட்சத்தில் கழிப்பறை கட்டிடம்



எமரால்டு நிறுவனத்தின் CSR திட்டத்தின் மூலம் கிரிஷா அறக்கட்டளை சார்பாக அரசு தொடக்கப்பள்ளி அசோகபுரத்தில், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை கட்டிக்கொடுத்தது.

எமரால்டு நிறுவனத்தின் CSR மூலம் சமூக முன்னேற்றப்பணியின் 10வது அரசுப்பள்ளிக்கூடமாக இப்பள்ளி அமைந்துள்ளது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் திரு.பவன்குமார் I.A.S., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கட்டிடத்தை திறந்து வைத்தார். பள்ளி மாணவ மாணவிகளுக்கு சுகாதார முக்கியத்துவம் குறித்து சிறப்புரை வழங்கினார். எமரால்டு நிறுவனத்தின் தலைவர், நிர்வாக இயக்குனர் திரு.சீனிவாசன் அவர்கள் விழாப் பேருரை வழங்கினார். எமரால்டு நிறுவனம் சார்பாக செய்யப்படும் கிராமம் முன்னேற்ற பணிகள் குறித்து விளக்கினார். எமரால்டு மருத்துவ நல மையத்தின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.பாலமுரளி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். எமரால்டு நிறுவனத்தின் CSR திட்டத்தின் மேலாளர் திரு.தினேஷ் குமார் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார்.

எமரால்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். பெரியநாயக்கன் பாளையம் ஒன்றியத்தின் வட்டார கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டனர். பள்ளியின் ஆசிரியப் பெருமக்கள், இருபால் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.பள்ளியின் ஆசிரியை திருமதி. பொற்கொடி அவர்கள் நன்றியுரை வழங்கி விழா இனிதே நிறைவுற்றது.

# கோவை அவிநாசி சாலை மேம்பால பணிகள் 98% நிறைவு



● கோவை

அவிநாசி சாலையில் ஏற்படும் போக்கு வரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் உப்பிலிபாளையம் சிக்னல் முதல் கோல்டுவின்ஸ் வரை 10.1 கிலோமீட்டர் தொலைவுக்கு உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணிகள் 2020 முதல் நடைபெற்று வருகிறது. தற்போது இந்த பணிகள் 98% நிறைவு பெற்றுள்ளது.

ஜி.டி.நாயுடு அருங்காட்சியகம், நவ இந்தியா பீளமேடு துணை அருகே, பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரி அருகே, வரதராஜபுரம் சிக்னல் அருகே, சி.ஐ.டி. கல்லூரி அருகே, பி.எஸ்.ஜி. கலை கல்லூரி எதிரே உள்ள இடங்களில் ஏறுதளம்/ இறங்கு தளம் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்றுவருகின்றன. பி.ஆர். எஸ் மைதானம் அருகே அமைந்துள்ள ஏறுதளம் குறித்து வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்பதால் அதுமட்டும் பாதியில் நிற்கின்றது. ஹோப்ஸ் சாலை பகுதியில் ரயில்வே பாலம் ஏற்கனவே இருப்பதால், அங்கு தூண்களை நிறுவுவது சாத்தியமில்லாமல் இருந்தது.

எனவே ரயில்வே பாலத்தின் ஆரம்ப மற்றும் முடிவுபகுதியின் அருகே அமைக்கப் பட்டுள்ள தூண்களின் இடையே உள்ள 52 மீட்டர் இடைவெளியைக் இணைக்க 900 டன் எடை கொண்ட மிக பெரும் இரும்பு பாலம் சமீபத்தில் பொருத்த துவங்கினர்.

தற்போது இந்த பணிகள் முடிவடைந்து உள்ளது. இரும்பு பாலம் இந்த இடைவெளியில் பொருத்தப்பட்டு, அதன் மேல் தார் சாலை அமைக்கும் பணி பெருமளவு நிறைவேறி உள்ளது.

மேம்பாலத்தின் மேற்பகுதியில் சாலைகள் போடப்பட்டுள்ளது. தடுப்பு சுவர்கள் அமைப்பது, மத்திய தடுப்பு, உயர் மின் விளக்குகள் பொருத்துவது, பாலத்திற்கு கீழேயும் மின் விளக்குகள் பொருத்துவது, மழைநீர் வடிகால்கள் அமைப்பது, வண்ணம் பூசுவது போன்ற பணிகள் நிறைவேறியுள்ளது. விரைவில் சோதனை ஓட்டம் நடைபெறும் எனவும் தகவல்கள் வெளிவந்துள்ளது.

மெட்ரோ திட்டத்திற்காக பாலம் 2 அடுக்கு மேம்பாலமாக உருவாகும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

செய்தியாளர் : டேவிட்
புகைப்படம் : கோவை க்ரானிகல்

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்

# 22 சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்படுகிறது

நலம் காக்கும் ஸ்டாலின்



● கோவை

தமிழக மக்களின் உடல் நலனை பாதுகாக்கும் வகையில், 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற சிறப்பு திட்டம் மூலம் தமிழகம் முழுவதும் முகாம்கள் நடை பெற்று வரு கிறது.

இதை தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் ஆகஸ்ட் 2ம் தேதி துவக்கி வைத்தார். கோயம் புத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளிலும் இந்த சிறப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப் பட்டு வருகின்றன.

அந்த வகையில், இன்று கோவை வடவள்ளி அருள்மிகு ஸ்ரீ மருதமலை சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மேல்நிலைப் பள்ளியில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது.

இதை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் 'கணபதி' ராஜ்குமார், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் முன்னிலை யில், கோவை மாவட்ட கலெக்டர் பவன்குமார் இன்று துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இந்த பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் கண் சிகிச்சை, பல் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சர்க்கரை நோய், இருதய நோய், நுரையீரல் நோய், தோல் சிகிச்சை, நரம்பியல் சிகிச்சை, எலும்பு மருத்துவம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இயன்முறை மருத்துவம், ஆயிஷ் மற்றும் சித்த மருத்துவம், மனநல மருத்துவம், குழந்தைகள் மருத் துவம், மகப்பேறு மருத்துவம், புற்றுநோய் மருத்துவம், காச நோய் மருத்துவம் உள்ளிட்ட 22 சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறது.

### கோவை மக்கள் பயன்படுத்திக்கொள்ள ஆட்சியர் அழைப்பு

மேலும், இம்முகாமில் தமிழக முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்ட அடையாள அட்டை வழங்குதல், மாற்று திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குதல் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக் கான உறுப்பினர் அட்டை வழங்கு தல் ஆகிய நிகழ்வுகளும் நடை பெறுகிறது.

இந்த சிறப்பு மருத்துவ முகாமில் மேற்காணும் மருத்துவப் பிரிவுகளில் உயர் சிறப்பு மருத்துவ நிபுணர்களால் பரிசோதனைகள் செய்து இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட அனைவரும் இம்முகாமில் கலந்துகொண்டு பல்நோக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை பலன்களை பெற்று பொது மக்கள் அனைவரும் நலமோடு வாழவேண்டுமென மாவட்ட கலெக்டர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார் களுக்கான ஊட்டச்சத்துபெட்டகங் கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பவன்குமார் வழங்கினார்.




# கோவை கல்லூரிகளுக்கு தேசிய அளவிலான பெருமை

● புதுதில்லி

மத்தியகல்விஅமைச்சர் தர்மேந்திர பிரதான்வியாழக்கிழமை தேசிய கல்வி நிறுவனர் தரவரிசை - NIRF 2025 பட்டியலை வெளியிட்டார். இதில், கோயம்புத்தூரைச் சேர்ந்த பல கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகள், நாட்டின் முன்னணி 100 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகள் பிரிவில் கோவையைச் சேர்ந்த பலகல்வி நிறுவனங்கள் இடம்பெற்றிருப்பது, கோவை மாவட்டம் உயர் கல்வியின் மையமாக வளர்வது மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது.

| கலை அறிவியல் கல்லூரிகள் | |
|---|---|
| ● பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி | 9–வது இடம் |
| ● பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி | 10–வது இடம் |
| ● ஸ்ரீ கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி | 50–வது இடம் |
| ● டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி | 66–வது இடம் |
| ● அரசு கலைக்கல்லூரி | 67–வது இடம் |
| ● ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி | 76–வது இடம் |
| ● ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கலை அறிவியல் கல்லூரி | 94–வது இடம் |
| **பொறியியல் கல்லூரிகள்** | |
| ● அமிர்த விஸ்வ வித்யாபீடம் | 23–வது இடம் |
| ● பி.எஸ்.ஜி தொழில்நுட்ப கல்லூரி | 67–வது இடம் |
| ● ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல், தொழில்நுட்பக்கல்லூரி | 100–வது இடம் |

## ஜெர்மனியில் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர் அறிமுகம்

● பெர்லின்

ஜெர்மனியின் தொழில்நுட்ப வளர்ச்சியில் புதிய அத்தியாய மாக, உலகின் மிக சக்திவாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்களில் ஒன்றாக திகழும் "ஜூபிட்டர்" என்ற புதிய சூப்பர் கம்ப்யூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சூப்பர் கம்ப்யூட்டர் ஜெர்மனியின் ஜூலிச் நகரிலுள்ள சூப்பர் கம்ப்யூட்டிங் மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. ஜெர்மனி பிரதமர் ஒலஃப் ஸ்கோல்ஸ் நேரடியாக கலந்துகொண்டு இந்த மிகப்பெரிய நிகழ்வைத் தொடங்கி வைத்தார். "ஜூபிட்டர்" சூப்பர் கம்ப்யூட்டர்,அமெரிக்காவின் முன்னணி சிப் உற்பத்தி நிறுவனமான நிவிடியா வின் ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு குவிண்டிலியன் (1–ஐ தொடர்ந்து 18 பூஜ்ஜியங்கள்) கணக்குகளை ஒரு நொடிக்குள் செயலாக்கும் அதிவேக திறன் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஜெர்மனி, உலகளவில் முன்னணி சூப்பர் கம்ப்யூட்டர் நாடுகளின் பட்டியலில் இணைந்துள்ளது.

இந்த அறிமுகத்தால், ஜெர்மனி ஐரோப்பா கண்டத்திலேயே முதலிடம் பிடித்ததுடன், உலகளவில் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது. இதனால், ஜெர்மனியின் ஆராய்ச்சி, அறிவியல், விண்வெளி மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகளில் ஆராய்ச்சிகளுக்கு பெரும் முன்னேற்றம் கிடைக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில் அதிகரிக்கும் மின்சார வாகன பயன்பாடு

# தமிழ்நாடு முழுவதும் விரைவில் 200 சார்ஜிங் ஸ்டேஷன்கள்

● கோவை

மின்சார வாகனப் பயன்பாடு என்பது இந்தியாவில் அதிகரித்து வருகிறது. எனவே மின்சார விநியோக சேவையில் ஈடுபடும் அரசு நிறுவனங்களிடம் மத்திய அரசு, நெடுஞ்சாலைப் பகுதிகளின் ஒவ்வொரு 25 கிலோ மீட்டருக்கு குறைந்தது 1 பொது மின்சார வாகன சார்ஜிங் நிலையத்தையாவது அமைக்க வேண்டும் என சில ஆண்டுகளாகவே அறிவுறுத்தி வருகிறது.

இந்த நிலையில், தமிழ் நாடு முழுவதும் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் முதல் கட்டமாக 200 சார்ஜிங் ஸ்டேஷன்கள் அமைக்கும் பணி விரைவில் துவங்க வுள்ளதாக தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது என இன்று தகவல் வெளியானது.



முதல் கட்டமாக சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள நெடுஞ்சாலை பகுதிகளில் இவை அமையும் எனத் தெரிய வருகிறது. இதற்காக தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் 19 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சார்ஜிங் ஸ்டேஷன்கள் அமைக்கத் திட்டம் உள்ளதாக இன்று தகவல் வெளிவந்தது.

ஏற்கனவே கோவை மாநகரின் 10 இடங்களில் சார்ஜிங் நிலை யங்கள் அமைக்க கோவை மாநகராட்சி தயாராகி வரும் நிலையில், நெடுஞ்சாலைப் பகுதி களிலும் இதுபோன்ற நிலையங் கள் அமைந்தால் அது மின்சார வாகன ஓட்டிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இந்த பணிகள் விரைந்து நடைபெறவேண்டும் என்பதே மின்சார வாகன ஓட்டிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

உக்ரைன் போர், அமெரிக்காவின் நிர்வாக ரீதியான மாற்றங்களால்

# அதிகரிக்கும் தங்கம் விலை! வந்தாச்சு 9 காரட் தங்கம்!



● கோவை

உக்ரைன் போர், அமெரிக்காவின் நிர்வாக ரீதியான மாற்றங்கள் உள்ளிட்ட பல காரணங்களால் தங்கம் விலை நாளுக்கு நாள் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து கொண்டே போகிறது. தற்போது 22 காரட் தங்கம் சவரன் ரூ.80 ஆயிரத்தைநெருங்கிவிட்டது. இதனால் சாமானியர்கள் நகை வாங்க முடியாமல் திணறுகிறார்கள்.

**9 காரட் தங்கம் அறிமுகம்**

இந்திய சந்தையில் அறிமுகமாகி யுள்ள 9 காரட் தங்கத்திற்கு ஹால் மார்க் முத்திரையுடன் தரச்சான்றும் வழங்கப்படும். தங்கம் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து வரும் நிலை யில், தற்போது 9 காரட் தங்கம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் விலை என்ன என்றும் தெரிந்து கொள்ளலாம். இந்திய அரசு சமீபத்தில் 9 காரட் தங்கத்தை விற்பனை செய்ய அனுமதித்துள்ளது.

22 மற்றும் 24 காரட் தங்க நகைப் போலவே 9 காரட் தங்கத்தை நகைகளாக வாங்கலாம். தற்போது சந்தையில் விற்கப்படும் தங்கத்தை விட 9 காரட் தங்கம் குறைந்த விலை யில் விற்பனை செய்யப்படுகிறது.

**24 காரட் vs 9 காரட் தங்கம்**

24 காரட் தங்கம் என்பது தூய தங்கம் (99.9%). இதில் வேறு எந்த உலோகங்களும் சேர்க்கப்பட மாட்டாது. அதனால் இதன் விலை அதிகம். மாறாக, 9 காரட் தங்கத்தில் 37.5 சதவீதம் தூய தங்கம் மட்டுமே இருக்கும். மீதமுள்ள 62.5 சதவீதம் செம்பு,வெள்ளி உள்ளிட்ட பிற உலோகங்களாகும்.

**முதலீட்டுக்கான வாய்ப்பு**

வெறும் ஆபரணமாக மட்டு மல்லாமல், தற்போது வெளியாகி யுள்ள 9 காரட் தங்கம் ஒரு நல்ல முதலீட்டுக் கருவியாகவும் மக்கள் கருத தொடங்கியுள்ளனர்.

# எளிமை தான் ஆரோக்கியத்தின் ரகசியம்!



நாம் வேகமாகச் செல்லும் உலகில் வாழ்கிறோம். தொழில்நுட்பமும் புதுமைகளும் வாழ்வை எளிதாக்கினாலும், அவை வாழ்க்கையை சோம்பேறித்தனமாகவும் மாற்றியுள்ளன.

லிப்ட் படிக்கட்டுகளை ஏறி நமது உடல் அசைவை குறைகிறது , ஆன்லைன் ஷாப்பிங் சந்தைக்கு நடப்பதை மாற்றிவிட்டது , திரை முன் கழியும் மணி நேரங்கள் வெளி உலகத்தையும், விளையாட்டையும் மறக்கடிக்க செய்கின்றனர். இந்த தேவையில்லாத வசதிகளுக்கான விலைநம் உடல்,மன ஆரோக்கியத்தில் ஏற்படும் தொய்வுதான் .

இப்போது அதிகம் மேட்டபாலிக் குறைபாடுகள், எலும்பு–மூட்டு சிதைவுகள், மனநலப் பிரச்சினைகள் என பல வியாதிகள் எல்லாப் தரப்பு வயதினரையும் பாதிக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் இருந்து தப்பிக்க நமக்கு இருக்கும் ஒரே ஆயுதம் உடற்பயிற்சி தான் .

பலர் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமெனில் ஜிம் சென்று அதிக உறுப்பினர் கட்டணம் செலுத்தி உடற்பயிற்சி செய்ய வேண்டும் அல்லது விலையுயர்ந்த கருவிகள் தேவை என்று நினைக்கிறார்கள். உண்மையில் ஆரோக்கியம் எளிமையானது — தினமும் சீராக உடலை இயக்குவதுதான் மிகவும் முக்கியம். அப்படிச் சீராக உடலை இயக்க தினமும் 20-30 நிமிடங்கள் உடற்பயிற்சி நம் வாழ்க்கை முழுவதும் பெரும் நன்மையை தரும்.

**"எளிமை தான், ஆனால் எளிதல்ல"**

தினமும் உடற்பயிற்சி செய்து இயக்குவது எளிய யோசனை, ஆனால் நடைமுறையில் எளிதல்ல. பிஸியான அட்டவணைகள் நமக்கு பெறும் தடையாகின்றன. அதனால் ஆரோக்கியத்தை செலவாக கருதாமல் , நமது வாழ்நாள் முதலீடாகக் காண வேண்டியது கட்டாயம். சிறிய நடை, சில உடல் அசைவு அல்லது உடல் பயிற்சி — இவை எதிர் வரும் பெரிய மருத்துவச் செலவுகளைத் தவிர்க்கும் முக்கிய காரணமாக இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே இருப்பினும் அதை செய்யத் தவறுகிறோம்.

**உணவுப் பழக்கத்தில் சிந்தனை**

பெரும்பாலும் உணவுப் பழக்கங்களை மாற்றுவது சிக்கலானவை அல்லது விலையுயர்ந்தவை என்ற தவறான நம்பிக்கை உள்ளது. ஆனால் உண்மையில் மனப்பூர்வ உணவு ( மைண்ட் புல் ஈட்டிங் ) — சமநிலை, மிதமான அளவு, ஆகியவே முக்கியம். வீட்டில் சமைத்த உணவைத் தேர்வு செய்வது, மிகக் குறைவான பதப்படுத்தப்பட்ட பொருட்களை உட்கொள்வது, அளவுக்கு மீறாமல் சாப்பிடுவது ஆரோக்கியத்திற்கு பெரும் பலன் தரும்.

எளிமையான உணவை சாப்பிடுவது நமது ஆரோக்கியத்தின் முக்கிய பங்காற்றும் என நாம அறிய வேண்டும். முதலில் தேவையாக உணவுப் பழக்கத்தில் இருந்து நாம் வெளிவர வேண்டும் எளிமையான உணவை சாப்பிடும் பொது உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கும் நீரிழிவு, இரத்த அழுத்தம், இதய நோய் போன்றவற்றைத் தடுக்கும்.

ஏலும்புகள்–மூட்டுகளை வலுப்படுத்தும். மன அழுத்தத்தைக் குறைத்து , மனநிலையை மேம்படுத்துகிறது, நம்பிக்கையை வளர்க்கிறது, நினைவாற்றலைக் கூர்மைப்படுத்துகிறது, நல்ல உறக்கத்தைத் தருகிறது.

ஆரோக்கியம் முக்கியமானது தினமும் இயங்குங்கள், சிந்தித்து உணவருந்துங்கள், சீராக வாழத் தொடருங்கள்.இன்றே தொடங்குங்கள் தினமும் இரவு உணவுக்குப் பிறகு 15 நிமிடங்கள் நடந்து பாருங்கள். உடல் வலிமைமாறும் ! எளிமை தான் ஆரோக்கியத்தின் ரகசியம் என்ற எண்ணம் நம்முள் ஏற்படும்

# கோவையில் கல்வி கடன் வழங்கும் சிறப்பு முகாம்!

● **கோவை**

கோவை மாவட்டத்தில் பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற கல்லூரிகள், பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்ற கல்வி நிறுவனங்களில் உயர்கல்வியில் சேர்ந்துள்ள மாணவர்-மாணவிகள் கல்விக் கடன் பெறவசதியாக மாவட்ட நிலவரம் சார்பில் கல்விக் கடன் வழங்கும் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி, கோவை பீளமேடுபகுதியில் உள்ள பி.எஸ்.ஜி. இன்ஜினியரிங் கல்லூரியில் கடந்த வியாழக் கிழமை செப்டம்பர் 11ஆம் தேதி நடைபெற்றது. தொடர்ந்து வரும் 17ம்தேதி பொள்ளாச்சியில் டாக்டர் மஹாலிங்கம் பொறியியல் கல்லூரியிலும், 19ம் தேதி ஈச்சனாரி கற்பகம் உயர்க் கல்வி நிறுவனங்களிலும் முகாம்கள் நடத்தப்படுகிறது. இந்த முகாம் நடைபெறும் இடங்களில் மாணவர்–மாணவிகள் கல்விக் கடன் பெற தேவையான ஆவணங்களான பான் கார்ட்,ஆதார் அட்டை, 10–ம் & 12–ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ், கல்லூரிக் கட்டண ரசீது ,கல்லூரி சேர்க்கை கட்டணம் ரசீது\ பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் - 2, குடும்ப அட்டை நகல் (ரேஷன் கார்டு ) வங்கி கணக்கு புத்தகம், உறுதி மொழி சான்று ( Bonafide Certificate ) இளங்கலை பட்டப் படிப்பு முடித்து முதுகலைப் பட்டப்படிப்பில் சேர இருப்பவர்கள் இத்துடன் சான்றிதழ், இளங்கலை பட்ட படிப்பு சான்றிதழ், இளங்கலை மதிப்பெண் சான்றிதழ், முதுகலை படிப்பில் சேர்ந்ததற்கான ஆவணங்கள், கல்லூரி அடையாள அட்டை. ஆகிய ஆவணங்களை கொண்டு முகாமில் கல்விக்கடன் கோரி விண்ணப்பிக்கலாம்.






# கே.எம்.சி.எச் –ன் புதிய கிராமப்புற சுகாதார மையம் திறப்பு

● **கோவை**

கோவையில் உள்ள தடாகமும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கும் பலன் அளிக்கும் வகையில், ஆனைக்கட்டி சாலை, தண்ணீர் பந்தல், தடாகம் அருகே அமைக்கப்பட்டுள்ள கே.எம்.சி.எச் மருத்துவக் கல்லூரியின் கிராமப்புற சுகாதார மையக் கட்டிட புதிய மையத்தை கடந்த (10–06–2025) புதன்கிழமை முன்னாள் மின்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி திறந்து வைத்தார் .

இந்த நிகழ்ச்சிக்கு கே.எம்.சி.எச் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் நள்ளா ஜி. பழனிசாமி தலைமை தாங்கினார். துணை தலைவர் டாக்டர் தவமணி தேவி பழனிசாமி, இயக்குனர் டாக்டர் அருண் என். பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். பல்வேறு பொது மக்கள் மற்றும் உள்ளூர் தலைவர்கள் விழாவில் பங்கேற்றனர்.

இந்த மையத்தில், நோயாளிகள் ஒரு முறை செலுத்தும் வெளிநோயாளர் கட்டணம் ரூ.30க்கு, ஒரு வருடம் வரையிலும் வரம்பற்ற மருத்துவ ஆலோசனைகள் பெறலாம். மேலும், பல்வேறு பரிசோதனைகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது .அதில்-ரத்தப்பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, ரத்த உப்புச்சத்து அளவு பரிசோதனை, க்ரியேட்டினின், சர்க்கரை, பேப் ஸ்மியர், ரத்தக் குழு, மலேரியா பராசைட் பரிசோதனை, மார்பு எக்ஸ்–ரே, இ.சி.ஜி. ஆகியவை அடங்கும்.

கே.எம்.சி.எச் மருத்துவக் கல்லூரியின் கிராமப்புற சுகாதார மைய கட்டிட தொடக்க விழா உரையில், டாக்டர் நள்ளா ஜி. பழனிசாமி பொதுமக்கள் இந்த கிராமப்புற சுகாதார மையத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

இது, கிராமப்புற ஏழை மக்களின் நலனுக்காகவே நிறுவப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### 4வது பொதுக்குழு, 9வது ஆண்டு பொதுக்குழுவில்

# தமிழ்நாடு இளம் மழலையர் பள்ளிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை !




● **கோவை**

தமிழ்நாடு இளம்மழலையர் பள்ளிகள் - 4வது பொதுக்குழு மற்றும் 9வது ஆண்டு பொதுக்குழு கடந்த செப்டம்பர் 6ஆம் தேதி தலைவர்: திரு. K. கௌதமன் தலைமையில் கோவை பீளமேடு மணி மகால் மண்டபதில் சிறப்பாக நடைபெற்றது .

இதில் தமிழகத்தின் 21 மாவட்டங்களில் இருந்து 250–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு . தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கோரிக்கை வைக்கப்பட்டன , இந்தக் கோரிக்கையில் பின்வருமாறு

சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள கல்விக் கொள்கையில் சிறிய மாற்றங்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். குழந்தையின்மூளைவளர்ச்சி பெரும்பகுதி 6 வயதுக்குள் நிறைவடைகிறது. எனவே 6 வயதுக்குக் கீழ் உள்ள முன்பள்ளி பருவக் கல்வி (ECCE) மிக முக்கியமானது இதனைக் கருத்தில் கொண்டு கல்விக் கொள்கையில் மாற்றங்கள் செய்ய அரசை வேண்டுகிறோம்.

ஆண்டுதோறும் சுமார் 10 லட்சம் குழந்தைகள் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் பங்கேற்கின்றனர்.ஆனால் 4 லட்சம் குழந்தைகள் மட்டுமே முன்பள்ளி கல்வி பெறுகின்றனர். எனவே, பள்ளியில் சேர்க்கும் வயது 3 ஆக நிர்ணயிக்கப்பட வேண்டும். ECCE கல்வியை பெரும்பாலும் தனியார் பள்ளிகளே வழங்குகின்றன. பெண்கள் தங்கள் வீடு அல்லது அருகிலுள்ள கட்டிடங்களில் இளம் மழலையர் பள்ளிகளை நடத்துகின்றனர்.பணிபுரிவோரும், பயனீட்டாளர்களும் பெண்கள், குழந்தைகள் என்பதால் சட்டங்கள் எளிமை படுத்தப்பட வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள சில விதிமுறைகள் (15 ஆண்டு வாடகை ஒப்பந்தம், DTCP ஒப்புதல், 5.5 சென்ட் நிலம், டிரஸ்ட் உரிமை போன்றவை) பெரிய பள்ளிகளுக்கே பொருந்தும்.இவை சிறிய முன்பள்ளிகளுக்கு கடினமானவை. எனவே தனியார் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை சட்டம், மழலையர் பள்ளிகளுக்காக தனியாக வகுக்கப்பட வேண்டும். இளம் மழலையர் பள்ளிகள் ரூ.2000 ஆய்வுக் கட்டணம் செலுத்துகின்றன.ஆய்வுக்காக ECCE படித்தவர்களை நியமிக்க வேண்டும்.முன்பள்ளிகல்விக்கான தனி இயக்குநரகம் அமைக்கப்பட முன்வர வேண்டும்.

வாடகை கட்டிடங்களுக்கு குப்பைவரி, மின்சாரம், சொத்து வரி ஆகியவை வணிகக் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றன.இதனால் பெற்றோருக்கு கூடுதல் சுமை ஏற்படுகிறது.எனவே குறைந்த கட்டணமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

தற்போது8 அரசு அலுவலர்களிடம் சான்று பெற வேண்டும். இதை குறைக்கும் எளிதாக்கி வகையில் எளிதாக்கி சிரமமின்றி சான்று பெற வழிவகை செய்ய வேண்டும்

எதிர்காலத்தில் சட்டத் திருத்தங்கள் அறிவிக்கும் போது, இளம்மழலையர் பள்ளி சங்கங்கள் அவற்றில் பங்கேற்க ஏதுவாக இருக்க வழிவகை செய்ய வேண்டும்.' என அரசுக்கு கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

இந்த கூட்டத்தில் தலைவர்: திரு. கௌதமன்,செயலாளர்: திரு. ஜெரோம், பொருளாளர்: திரு. முகேஷ் உறுப்பினர்கள்: திருமதி. குமுதா காந்தி, கீதாஞ்சலி, லதா ராமதாஸ், ஜெனில் குமார், ஆறுமுகம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.








# ஸ்ரீ ராமகிருஷ்ணா சார்பில் தற்கொலை தடுப்பு தின விழிப்புணர்வு உறுதிமொழி

● **கோவை**

கோயம்புத்தூர் ஸ்ரீராமகிருஷ்ணா பாராமெடிக்கல் சயின்சஸ் (SRIPMS)நர்சிங் கல்லூரியில், உலக தற்கொலை தடுப்பு தினம் புதன்கிழமை அனுசரிக்கப்பட்டது. மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உறுதி மொழி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் 400–க்கும் மேற்பட்ட மாணவர்கள் உறுதிமொழி எடுத்தனர். நிகழ்ச்சியில் டீன் மற்றும் மருத்துவ இயக்குநர் டாக்டர் எஸ்.ராஜகோபால், டாக்டர் எஸ். அழகப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

கல்லூரி முதல்வர் டாக்டர்எஸ். கிரிஜாகுமாரி மற்றும் பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தெரு நாய்களுக்கு பொது இடங்களில் உணவளிப்பதற்குத் தடை!

உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய உத்தரவுப்படி, தெரு நாய்களுக்கு பொது இடங்களில் உணவளிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த உத்தரவு நாடு முழுவதும் பொருந்தும். உணவு அளிப்போர், நாய்கள் ஏதேனும் ஒருவரைக் கடித்தால் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும், மேலும் மருத்துவச் செலவுகளையும் ஏற்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. மாநகராட்சிகள் தெரு நாய்களுக்கு உணவளிக்க ஒரு தனி இடத்தை ஒதுக்க வேண்டும் என்றும், விதிமீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பொது இடங்களில் தெரு நாய்களுக்கு உணவளிக்கக் கூடாது என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தெரு நாய்களுக்கு உணவளிக்க, மாநகராட்சி நிர்வாகம் ஒரு தனி இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். உணவளிப்பவர்தான், நாய்கள் யாரையாவது கடித்தால் அதற்குப் பொறுப்பாக வேண்டும், மேலும் அதற்கான மருத்துவ மற்றும் பராமரிப்புச் செலவுகளையும் ஏற்க வேண்டும். இந்த உத்தரவை மீறி பொது இடங்களில் உணவு அளிப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்கள் நாடு முழுவதும் உள்ள தெரு நாய்கள் விவகாரத்திற்குப் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.






### சிம்பொனியின் செந்தமிழ் முகமான ராஜாவுக்கு பாராட்டு விழா

# இளையராஜாவின் 'சிம்பொனி' ஒரு பார்வை

இசைஞானி இளையராஜா எழுதிய 'இசைக் கவிதையான' சிம்பொனி லண்டன் மாநகரில் உள்ள ஈவண்ட் அப்பல்லோ அரங்கத்தில் உலகின் தலைசிறந்த ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழுவினரால் VALIANT (நெஞ்சுரம் மிக்க) என்ற பெயரில் அரங்கேற்றப்பட்டுவிட்டது. ஹெய்டன், பித்தோவன், மொசார்ட், சாய்கோவ்ஸ்கி வரிசை யில் சிம்பொனியின் இந்திய முகமாக இன்னும் சொல்லப்போனால் செந்தமிழ் முகமாக ராஜா மாறியிருக்கிறார்.

இந்தியாவில் உள்ள கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை போல, மேற்கத்திய நாடுகளில உள்ள Opera, Oratoria, Sonata, Concerto போன்ற பல்வேறு இசை வடிவங்களில் ஒருவகைதான் சிம்பொனி என்பது. கிரேக்க சொல்லான சிம்பொனி என்ற வார்த்தைக்கு 'இசையின் ஒத்திசைவு' என்று பொருள் கொள்ளலாம். பாடல் கள் இல்லாமல் இசையை மட்டும் தனித்து கேட்பதற்காக பதினாறாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இசை வடிவங்களில் ஒன்று.

ஒரு கருப்பொருளை (Theme) எடுத்துக் கொண்டு The Fast Movement:, The Slow Movement, The Dance Number, An Impressive Fast Movement என்று நான்கு பகுதிகளாக பிரித்து இசை வடிவில் கதை சொல்வது தான் சிம்பொனியின் சாராம்சம்.

சிம்பொனிக்கென்று கறாரான பல விதிகள் உண்டு சிம்பொனியை ஸ்டுடியோவில் பதிவு செய்து வெளியிட முடியாது. அரங்கத்தில் பார்வை யாளர்கள் முன்னிலையில் 30 முதல் 100 வரையிலான இசைக்கலைஞர்களை கொண்டு தான் அரங்கேற்றம் செய்ய வேண்டும். இத்தனை கலைஞர்களுக்கு இசைக் குறிப்பு எழுதிக்கொடுப்பதென்பது சிம்பொனி எழுதும் இசைக் கலைஞன் முன் இருக்க கூடிய மிகப்பெரிய சவால். மேலும் வயலின், செல்லோ, வயலோ, புல்லாங்குழல், பியானோ, டிரம்ஸ் உள்ளிட்ட குறிப்பிட்ட சில இசை கருவிகளை பயன்படுத்தி மட்டுமே இசைக்க வேண்டும். தபேலா, வீணை போன்ற இசைக் கருவிகளையும், கீபோர்டு போன்ற எலக்ட்ரானிக் கருவிகளையும் பயன்படுத்த முடியாது, மூவ்மெண்ட் என்றழைக்கப்படும் ஒவ்வொரு பகுதியும் கணிச மான நேரம் இசைக்கப்பட வேண்டும், என்பன உள்ளிட்ட ஏகப்பட்ட விதிகள் உண்டு. இப்படிப்பட்ட சவால்களை ஏற்றுக் கொண்டு வென்று காட்டுவது தானே மேதைகளின் இயல்பு அதன்படி இந்திய இசைமேதையான இளையராஜாவுக்கும் சிம்பொனி எழுதி அரங்கேற்ற வேண்டுமென்பது நெடுநாள் விருப்பமாகவே இருந்து வந்துள்ளது.

1979–ம் ஆண்டிலிருந்தே சிம்பொனி வடிவத்திலான இசைக்கோர்வைகளை சிறிய அளவில் உருவாக்கி, தான் இசையமைக்கும் திரைப்படங்களில் பயன்படுத்த தொடங்கினார். அந்த ஆண்டில் வெளிவந்த புதிய வார்ப்புகள் திரைப்படத்தில் "இதயம் போகுதே" என்ற பாடல், பிராண்ஸ் சூபேர்ட் என்பவர் எழுதிய 8–வது சிம்பொனியின் தாக்கத்தால் உருவாக்கப்பட்ட பாடல். அதற்கு பின் ஆனந்த ராகம் கேட்கும் நேரம், பூங்கதவே தாழ் திறவாய், சுந்தரி கண்ணால் ஒரு சேதி உள்ளிட்ட பல பாடல்களின் இடையிசை (InterLude) துவக்க இசை (PreLude) ஆகிய வற்றை சிம்பொனியின் சாயலில் அமைத்திருப்பார். அதற்குப்பின் மேற்கத்திய இசையுடன், இந்திய நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானிய இசை ஆகிய இசைவடிவங்களை ஒருங்கிணைத்து 1986–ல் How to Name it, 1988–ல் Nothing but Wind ஆகிய தனியிசை தொகுப்பு களை உருவாக்கி வெளியிட்டார். இத்தொகுப்புகளில் வரும் இசைக் கோர்வைகள் அபூர்வ சகோதரர்கள் படத்தின் TitleScore - ஆகவும், பாலு மகேந்திரா இயக்கிய 'வீடு' படத்தில் பின்னணி இசையாகவும் பயன்படுத்தப்படுத்தப்பட்டது.

1993–ம்ஆண்டில் லண்டனை தலைமையிடமாக கொண்ட பிரமிட் இண்டர் நேஷனல் ரிக்கார்டிங் நிறுவனம் இளையராஜாவை சிம்பொனி அமைக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டது அதன் ஒருபகுதியாக How to Name it , Nothing but Wind ஆகிய இரண்டு தனியிசை தொகுப்புகளை யும் ராயல் பில்ஹார்மோனிக் இசைக் குழுவினருக்கு அனுப்பி அனுமதி பெற்றது. அதன்படி அதே ஆண்டு ஜூலை மாதம் FANTASY என்ற பெயரிட்ட முதல் சிம்பொனியை அரங்கேற்றினார்.

சிம்பொனியை அமைத்து விட்டு லண்டனில் இருந்துசென்னை திரும்பிய இளையராஜாவை திராவிடர் கழகத்தை சேர்ந்தவர்கள் சாரட் வண்டியில் அமரவைத்து அழைத்து வந்து வரவேற்பு அளித்தார்கள்.

பின்பு இளையராஜா அமைத்த சிம்பொனி யில் உலகளாவிய தன்மை இல்லை, இந்திய இசையின் கூறுகள் நிறைந்துள்ளது. இது முழுமையான சிம்பொனி இல்லை என்ற விமர்சனம் மேற்கத்திய இசை விமர்சகர் களால் முன்வைக்கபட்டது. அது இசைஞானியை பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கியது. அதனால் அதை CD/DVD யாகவோ வெளியிடாமல் நிறுத்தி வைத்து விட்டார். ஜுராசிக் பார்க், ஸ்டார் வார்ஸ் போன்ற திரைப்படங்களுக்கு இசையமைத்த ஜான் வில்லியம்ஸ் சிம்பொனி அமைத்த போதும் மேற்கத்திய இசை விமர்சர்களால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

ராஜாவின் சிம்பொனி நிறுத்தப்பட்டது தொடர்பாக ராயல்பில்ஹார் மோனிக் இசைக்குழுவின் நடந்துனரான ஜான்ஸ்காட் கூறும்போது "பீத்தோவனின் காலத்திலிருந்தே ஒவ்வொரு சிறந்த இசையமைப்பாளரையும் விமர்சகர்கள் எவ்வாறு சிலுவையில் அறைந்து காயப்படுத்தி வருகின்றனர் என்பதற்கு மற்றுமொரு உதாரணம் இந்நிகழ்வு என்று குறிப்பிட்டுள்ளார்.

1993–ம் ஆண்டு ராஜா அமைத்த சிம்பொனி இசையின் ஒருபகுதி 1996–ல் பிரிய தர்ஷன் இயக்கத்தில் மோகன்லால் நடிப்பில் வெளிவந்த காலாபாணி (தமிழில்: சிறைச்சாலை) திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில் VALIANT என்ற தலைப்புக்கேற்றபடி 22 ஆண்டுகள் கழித்து நெஞ்சுரத்துடன் மீண்டும் லண்டன் சென்று 82 வயதில் சிம்பொனி எழுதி அரங்கேற்றி விட்டு வந்திருக்கும் ராஜா.

#### அரசு சார்பில் பாராட்டுவிழா!

இளையராஜா மேற்கத்திய – கர்நாடக இசை கலந்த 'வேலியண்ட்' சிம்பொனி இசை நிகழ்ச்சியை லண்டனில் உள்ள அப்பல்லோ அரங்கத்தில் கடந்த மார்ச் 8–ம் தேதி அரங்கேற்றினார். லண்டனில் இருந்து இளையராஜா திரும்பியபோதே, அரை நூற்றாண்டு இசைப் பயணத்தை கொண்டாடும் விதமாக தமிழக அரசு தரப்பில் பாராட்டு விழா நடத்தப்படும் என்று என அறிவிக்கப்பட்டுள்ளது . இளையராஜாவின் அரை நூற்றாண்டு இசைப் பயணத்தை சிறப்பிக்கும் விதமாக, வரும் 13ம் தேதி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் மாலை 5.30 மணிக்கு விழா நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த விழாவில் மூத்த நடிகர்கள் திரைப்பிரபலங்கள் பங்கேற்கின்றனர். இந்த பாராட்டு விழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

- அர்ந்தனா ஸ்ரீனிவாஸ்

## சென்னையில் 'டிஎன்ஏ வீடு'

### தொழில்முனைவோருக்கான ஹேக்கர் ஹவுஸ்!

● சென்னை

சென்னை, துரைப்பாக்கத்தில் "டிஎன்ஏ வீடு" என்ற பெயரில் புதுமையாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கான ஹேக்கர் ஹவுஸ் துவங்கப்பட்டுள்ளது. இது நிறுவனர்கள், படைப்பாளிகள் மற்றும் லட்சிய நோக்கமுடைய நபர்களுக்கான மையமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது புதுமை மற்றும் தொழில்முனைவோர் சமூகத்தை வளர்க்கும் நோக்கில் இந்த இடம் செயல்படுகிறது. இந்த ஹேக்கர் ஹவுஸில் மைக்ரோ–சாஸ் குறித்த கலந்துரையாடல்கள், ஸ்லீப் ஓவர்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும், "ஹவுஸ்வார்மிங் மாதங்கள்" என்ற தலைப்பில் நெட்வொர்க்கிங் மற்றும் அறிவுப் பகிர்வை ஊக்குவிக்கும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.



LAND FOR SALE
14 Cents with Building Ellaithottam Road, Peelamedu, Cbe
30 Cents with Building Jainagar, Peelamedu, Cbe
Ct: 94430 21183
MMA



கோவை பச்சாபாளையம்

## தொ. ஊ. ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 79-வது சுதந்திர தின விழா

● கோவை

தொ. ஊ. ஒன்றிய நடுநிலைப்பள்ளி பச்சா பாளையத்தில் 79 ஆவது சுதந்திர தின விழா 15.08.2025 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திரு ஏர்போர்ட் ராஜேந்திரன் வார்டு உறுப்பினர்கள் ஊர் தலைவர்கள் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தலைமை ஆசிரியர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தினத்தை பற்றி சிறப்புரை ஆற்றினார் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சுதந்திரம் பெற நம் முன்னோர்கள் பட்ட கஷ்டங்களையும் அதை நாம் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தனர்.

நம் பள்ளி நலனில் அக்கறை கொண்ட திரு. M. ரவி (A.E – TNEB), திருமதி.M. கலையரசி, National Assessor – தேசிய தரச் சான்றிதழ் ஆய்வாளர் , Govt of india , அவர்கள் பள்ளி விழாவில் கலந்துகொண்டு, தான் அரசு பள்ளியில் படித்து உயர்ந்த நிலையில் இருப்பதையும் மாணவர்களும் அவ்வாறு உயர வேண்டும் என எழுச்சியூட்டும் விதமாக பேசினார்.

மேலும் சென்ற வருடம் முதல் மதிப்பெண் பெற்ற ஒன்று முதல் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய நினைவு பரிசு (momento) வழங்கினார் மற்றும் மாணவர்களின் கல்வித்தரம் உயர ஸ்மார்ட் போர்ட் வழங்குவதாகவும் உறுதியளித்தார். அதைத்தொடர்ந்து கடந்த ஆண்டு High Tech Lab – க்கு 8 இருக்கைகள் (chairs) வழங்கி உதவி புரிந்துள்ளதையும் தலைமை ஆசிரியர் நினைவு கூர்ந்தார். கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் அளிக்கப்பட்டது அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

## அமெரிக்கா நபரை திருமணம்! செய்வது இனி சுலபமில்லை!

● அமெரிக்கா

அமெரிக்காவில் கிரீன் கார்டு பெறுவதற்காக அமெரிக்கக் குடிமகனைத் திருமணம் செய்வது அதிகரித்துள்ள நிலையில், இதற்கு பல கட்டுப்பாடு விதிக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதாவது ஏற்கனவே இருக்கும் முறையானது ஒரு குழந்தை அயல் நாட்டில் பிறந்தால் அது தானாகவே அந்த நாட்டு குடிமகனாக அல்லது குடிமக்களாக மாறிவிடும் இதை "ஆட்டோமேட்டிக் குடியுரிமை" என அழைப்பர். உலகின் அதிகப்படியான நாடுகளில் இந்த முறை தான் உள்ளது. அமெரிக்காவிலும் இதே சட்டம் அமலில் இருந்தாலும், தற்போது அதை நீக்குவதாக டிரம்ப் அறிவித்துள்ளார். இதனால் இனி, குழந்தை அமெரிக்காவில் பிறந்தாலே தானாக குடியுரிமை கிடைக்காது எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது இவரது அறிவிப்பு .

இதனால் அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடிவரவு சேவைகள் (USCIS) குடும்ப அடிப்படையிலான குடியேற்ற விசா விதிமுறைகளில் கடுமையான மாற்றங்களை அறிவித்துள்ளது. முக்கியமாக திருமண அடிப்படையில் விண்ணப்பிக்கும் போது பல்வேறு மோசடிகள் நடப்பதால், இனிமேல் விண்ணப்பதாரர்கள் அதிக ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் அதாவது தம்பதிகள் உண்மையான திருமண உறவிலிருப்பதை நிரூபிக்க புகைப்படங்கள், கூட்டு நிதி ஆவணங்கள், நண்பர்கள் அல்லது குடும்பத்தினரின் சான்றுகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.நேர்முகத் தேர்வு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முந்தைய விண்ணப்பங்கள் மற்றும் வரலாறுகளும் தீவிரமாக ஆய்வு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளன. எச்–1பி போன்ற விசாவில் அமெரிக்காவில் உள்ளவர்கள் திருமணத்தின் மூலம் நிலை மாற்றம் கோரும்போது, அவர்களின் பின்னணி விரிவாக விசாரிக்கப்படும். கிரீன் கார்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், நபர் தகுதியற்றவர் எனத் தெரிய வந்தால் உடனடியாக நாடு கடத்தப்படுவார் எனவும் தெரிவிக்கின்றனர் அமெரிக்கர் ஒருவரைத் திருமணம் செய்வதால் மட்டுமே கிரீன் கார்டு கிடைப்பது உறுதியல்ல. உண்மையான மற்றும் சட்டப்படி சரிபார்க்கப்பட்ட திருமணங்களுக்கே அங்கீகாரம் வழங்கப்படும் என புதிய அதிகாரிகள் விதிமுறைகள் தெரிவிக்கின்றனர் .



# சமூக சேவையில் சாதனை செய்யும் மேக்ஸ்வெல் அறக்கட்டளை

● கோவை

கோவை மேக்ஸ்வெல் அறக்கட்டளை கடந்த மூன்று ஆண்டுகளாக பல்வேறு நலத்திட்ட உதவிகளை மிக பிரம்மாண்ட மான அளவில் செய்து வருகின்றனர் . குறிப்பாக குழந்தைகளின் கல்வி, பெண்களின் தொழில், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு இவர்கள் ஆற்றிய சேவை எண்ணற்றவை.

ஒவ்வொரு ஆண்டும் மே மாத இறுதியில் மேக்ஸ்வெல் முத்துக்கள் என்ற தலைப்பில் தாய் அல்லது தந்தையை இழந்த அல்லது பொருளாதாரத்தில் பின்தங்கிய 500கும் மேற்ப்பட்ட மாணவ மாணவிகளுக்கு ஒரு வருடத்திற்கு தேவையான ஸ்கூல் பேக், நோட்புக்ஸ், ஸ்டீல் வாட்டர் பாட்டில் உட்பட மொத்த கல்வி உபகரணங்களையும் ஒரே அரங்கத்தில் வைத்து வழங்குவதில் இவர்கள் பெயர் பெற்றவர்கள்..




ஆதரவற்ற பெண்கள் முன்னேற்றத் திற்கு என மேக்ஸ்வெல் பொன்மகள் என்ற பிரம்மாண்ட விழா மூலம் பெண்கள் தின விழாவை முன்னிட்டு மார்ச் மாதத்தில் 5 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளனர் . இதுவரை ஆயிரத் திற்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந் துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் மற்றும் தீபாவளியை மலைவாழ் மக்களுடன் கொண்டாடு வதோடு மட்டுமல்லாமல் வருடத்தில் குறைந்த பட்சம் 20 கிராமங்களுக்கு தேவையான பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறார்கள்.. மேலும் அவ்வப்போது ரத்த தானம், மருத்துவ முகாம், விழிப்புணர்வு பிரச்சாரம், ஆட்டிசம் குழந்தைகளுக் கான நலத்திட்டங்களை செய்து கொண்டிருக்கின்றனர்..

மேக்ஸ்வெல் அணி நண்பர்களிடம் டிரஸ்டில் பணி புரிவது குறித்து கேட்டபோது திரு ஜெய்ஜாலன் அவர்கள் மலைவாழ் மக்களுக்கான சேவையில் அவர்களுக்கு அரிய வகையில் உள்ள தேவைகளை நிறைவேற்றும் போது அவர்களின் ஆச்சர்யம் கலந்த மகிழ்ச்சியை காணும் பொழுது அந்த உணர்வை அளவிட இயலாது என கூறினார். தொடர்ந்து பேசிய மகேஸ்வரி, தாய் அல்லது தந்தை இழந்த மாணவ மாணவியர்களின் கல்வி தேவைகளை நிறைவேற்றும் போது அவர்களின் எதிர்காலம் சிறப்பா அமையும்ன்னு நினைக்கும்போது அவ்வளவு சந்தோஷமா இருக்கும் என கூறினார்..

என்னைப் பொறுத்தவரை, ஒரு உதவி என்பது சரியான நேரத்தில் சரியான நபர்களுக்குச் செய்வது எங்கள் அறக்கட்டளையும் அதுபோலவே செய்கிறது என செல்வி சரண்யா கூறினார் உதவியை வாங்குற மக்களோட முகத்தில் இருக்கிற சந்தோஷமும் புன்னகையும் அவ்வளவு மனதிருப்தி ஒவ்வொரு முறையும் கொடுக்குது என்றார் மேக்ஸ்வெல் அட்மின் ஜமீர் அகமது.. மேக்ஸ்வெல் பயனாளி மாற்றுத்திறனாளி ஒருவரிடம் கேட்டபோது மேக்ஸ்வெல் நிறுவனர் முருகன் அண்ணே கிட்ட எப்ப உதவினு கேட்டாலும் தைரியமா இருங்க நான் பண்றேன்னு சொல்லி உதவி பண்ணுவார் என்றார்.

மேக்ஸ்வெல் அறக்கட்டளையி பல திரைப்படம் மற்றும் சின்னத்திரை நட்சத்திரங்களும் இணைந்துப் பணியாற்றுவது மேலும் சிறப்புள்ளதாக அமைந்துள்ளது. இப்படி நண்பர்கள் முதல் பயனாளிகள் வரை, சின்னத்திரை நட்சத்திரங்கள் முதல் திரைப்பட நடிகர்கள் வரை அனை வரும் கொண்டாடும் மேக்ஸ்வெல் அறக்கட்டளை தனது மூன்று ஆண்டு நிறைவு செய்து நாலாவது ஆண்டில் அடியெடுத்து வைத்து கோவையின் கூடுதல் பெருமையாக இணைந்துள்ளது.

### இந்திய தொழில் கூட்டமைப்பு (சி.ஐ.ஐ ) சார்பில்

# கோவையில் 9வது தேசிய உயர்கல்வி மாநாடு

● கோவை

இந்திய தொழில் கூட்டமைப்பின் (சி.ஐ.ஐ.) கோவை மண்டலம் சார்பில் 9வது தேசிய உயர்கல்வி மாநாடுகடந்த 11ஆம் தேதி கோவையில் நடைபெற்றது. 'உயர்கல்வியை சர்வதேசமயமாக்குதல் மற்றும் தொழில்மயமாக்குதல்' என்ற தலைப்பில் நடந்த இந்த மாநாட்டில் தொழில்துறை மற்றும் கல்வித்துறை நிபுணர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.




சி.ஐ.ஐ. கோவை மண்டலத் தலைவர் மற்றும் சால்ஸர் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குனர் ராஜேஷ் துரைசாமி பேசுகையில், 20 ஆண்டுகளுக்கு முன்பு வளர்ந்த நாடுகளுக்கு குறைந்த செலவில் சேவைகளை வழங்கும் நாடாக இந்தியா பார்க்கப்பட்டது. ஆனால், இன்று இந்தியா உலகிற்கே மதிப்புமிக்க பங்களிப்புகளை வழங்கும் நாடாக உருவெடுத்துள்ளது. இந்தியாவின் இந்த மாற்றம் நமது கல்வி நிறுவனங்களால் சாத்தியமானது என்று அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் தலைவரும் கோவை ஆர்.வி.எஸ் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலருமான செந்தில் கணேஷ், மாநாட்டின் தலைப்பு குறித்துப் பேசினார். இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் உடன் பிரிட்டனில் உள்ள பல்கலைக்கழகங்கள் மதிப்புமிக்க ஆய்வு கூட்டணிகளை உருவாக்க எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

சி.ஐ.ஐ. தெற்கு மண்டலத்தின் முன்னாள் தலைவர் மற்றும் ஜி.ஆர். ஜி கல்வி நிறுவனங்களின் நிறுவன அறங்காவலர் ஆர். நந்தின சிறப்புரை ஆற்றினார். அவர் பேசுகையில், இன்றைய உலகம் தொழில்நுட்பம், புவிசார் அரசியல் மற்றும் திறமை ஆகிய மூன்று அம்சங்களால் வடிவமைக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார். சி.ஐ.ஐ – ஐ.டபிள்யூ. என் பிரிவின் தமிழ்நாடு முன்னாள் தலைவர் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் எஸ். மலர்விழி

பேசுகையில், பல சர்வதேச பல்கலைக்கழகங்கள் ஏற்கெனவே இந்தியாவில் தங்கள் வளாகங்களை அமைக்கத் தொடங்கியுள்ளதாக கூறினார். மகாராஷ்டிரா ஒரு சர்வதேச கல்வி நகரத்தை அறிமுகப்படுத்தி, முன்னணி சர்வதேச பல்கலைக்கழகங்களை ஈர்த்து வருகிறது. அடுத்த ஆண்டு, 7 சர்வதேச பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்கள் வளாகங்களை நிறுவவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

சிஐஐ – தமிழ்நாடு பிரிவின் முன்னாள் தலைவர் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வனவராயர் தனது சிறப்புரையில், நீலகிரி உட்பட இந்தியப் பள்ளிகள் சர்வதேச புகழ் பெற்றவை. உயர்கல்வி நிறுவனங்கள் அவர்களின் முன்னேற்றத்தை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இந்திய தொழில்துறையை சேர்ந்த பல நிறுவனங்கள் சர்வதேச புகழ் பெற்ற நிறுவனங்களாக மாறியுள்ளன என்றார் .

சிஐஐ கோவை கல்விக்குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஃபயர்பேர்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் ரிசர்ச் இன் மேலாண்மை அறங்காவலர் சுஜனா அபிராமி நிறைவுரை ஆற்றினார்.




● லயன்ஸ் கிளப் ஆப் கோயம்புத்தூர் அக்ஷயம், கோயம்புத்தூர் அக்ஷயம் சாரிட்டபிள் டிரஸ்ட், லைப் ஆஃப் ஆட்டிசம் அறக்கட்டளை மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை ஆகியவை இணைந்து, கடந்த 10.09.2025 அன்று கோவையில் சிறப்பு கண் சிகிச்சை முகாமை நடத்தின.இந்த முகாமில் சுமார் 120 குழந்தைகள் பங்கேற்றனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை Dr டி கர்ணன் செய்துள்ளார்






## ஆக்மி லேடீஸ் சர்க்கிள் 85 சார்பாக அரசு நல உதவிகள்!

● கோவை

மேசையுடன் கூடிய பெஞ்சை நன்கொடை அளித்தல் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, கோயம்புத்தூரில் உள்ள காளப்பட்டி மாநகராட்சி தொடக்கப்பள்ளிக்கு, மேசை களுடன் கூடிய 40 பெஞ்சு களை கோயம்புத்தூர் ஆக்மி லேடீஸ் சர்க்கிள் 85 நன் கொடையாக வழங்கியது. இந்த நிகழ்ச்சியில் ஆக்மி லேடீஸ் சர்க்கிள் 85 தலைவர் கீர்த்தனா ஸ்ரீராம், நிர்வாகி கள் மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர் .






## புதிய காமெடி சேனலைத் துவங்கிய பிரபல நிறுவனம் !

● கோவை

கோவையை சேர்ந்த பிரபல காமெடி மற்றும் எண்டர் டெயின்மெண்ட் யூடியூப் சேனல் ஆன EMI தங்களது 6 வது சேனலை சமீபத்தில் தொடங்கியுள்ளது. அதற்கு ராணி & Co என்று பெயரிடப்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க மொபைல் கடையில் நடக்கும் காமெடிகளை மையப்படுத்திய சேனலாக உருவாகி உள்ளது. இது தொடங்கிய ஒரு வாரத்திலேயே 8000 சந்தாதாரர்களைக் கவர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது

## கோவையில் ஸ்டார்ட் அப் உச்சி மாநாடு

● கோவை

தமிழ்நாடு உலகளாவிய ஸ்டார்ட்அப் உச்சி மாநாடு 2025 கோயம்புத்தூரில் அடுத்த பெரிய முதலீட்டாளர்கள் நிகழ்வாக, StartupTN அமைப்பால் நடத்தப்படும் தமிழ்நாடு உலகளாவிய ஸ்டார்ட்அப் உச்சி மாநாடு 2025 (Tamil Nadu Global Startup Summit 2025) நடைபெற உள்ளது. இந்த நிகழ்வு தொழில்முனைவோர்களையும் முதலீட்டாளர்களையும் இணைத்து, மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் புதுமைகளை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வரும் அக்டோபர் மாதம் 9 மற்றும் 10, தேதிகளில் கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகதில் நடைபெறுகிறது

பேச்சாளர்கள், முதலீட்டாளர்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் ஸ்டால்கள் மற்றும் நெட்வொர்க்கிங் அமர்வுகள் இடம்பெறும்.100–க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் கலந்துகொள்வார்கள் என்றும், 500–க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் சந்திப்புகள் திட்டமிடப்பட்டுள்ளன என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

150 மாணவர் ஸ்டார்ட்அப் நிறுவனங்களை அடையாளம் காணவும் இந்த நிகழ்வு ஒரு வாய்ப்பாக அமையும்.










# வெற்றியாளர்களுக்கான 6 வழிமுறைகள்

## விளக்குகிறார் லயன் வைப்ரேஷன் வீரா



உலகத்தில் பிறந்த அனைவரும் வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என நினைப்பது இயல்பானது. அதில் ஓர் சிலர் வெற்றியை அடைகின்றார்கள். மற்றவர்கள் அந்த வெற்றியை அடையாமல் தம்மையே குறை சொல்லிக் கொண்டே இருப்பார்கள். வாய்ப்புக்காக காத்திருந்து வெற்றி பெற முடியுமா அல்லது நாம் செயல்படும்போது தான் வெற்றியை அடைய முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. உண்மையில் வெற்றியை அடைய வேண்டுமென்றால், மனதின் நிலையை மாற்ற வேண்டியது அவசியமாகின்றது. அந்த மனநிலையை மன மாற்றம் (Mind Shift) என்ற மனமாற்ற நிலையை அடைவதற்கான 6 வழி முறைகளை இவர் கண்டறிந்து விளக்குகிறார்.

### நன்றி உணர்வுக்கான மன மாற்றம் (Gratitude Mind Shift)

நமது அன்றாட வாழ்வில் வீட்டிலும் சரி, வெளியுலகிலும் சரி, நமக்கு சுற்றியுள்ளவர்களில் நமக்குத் தெரிந்த பல நபர்கள், பல விஷயங்களுக்கு உதவிசெய்கின்றார்கள். அவர்களின் அந்த உதவிகளுக்காக நாம் மனப்பூர்வமாக நன்றி சொல்லவேண்டும். நன்றி உணர்ச்சிக்கான மனமாற்றம் என்பது தன்னையும் சுற்றியுள்ள 3 பேர்களையும் பாராட்டுவதாகும். அன்றாட வாழ்வில் நமக்காக செய்த உதவிகளுக்காக அவர்களை நன்றி சொல்லுதல் வழக்கமாக்கினால் வாழ்வு மேலும் சிறப்பாக அமையும் என்பது எங்கனவோ அப்பியாசமாகும்.

### செயல்சார்ந்த மன மாற்றம் (Action Oriented Mind Shift)

என்ன நினைக்கிறோம் என்பதல்ல, எப்படி நினைக்கிறோம் என்பதே முக்கியம். திட்டமிடல், இலக்குகள், கனவுகள், நோக்கங்கள் எல்லாம் இருந்தாலும், அதை செயல்படுத்தாவிட்டால் பயனில்லை. செயல்சார்ந்த மனமாற்றம் என்பது உடனே செயல்படுவதாகும். உதாரணமாக, நாம் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று நினைத்தாலே போதாது. அந்த நினைவினை செயல்படுத்த வேண்டும். தினசரி உடற்பயிற்சி செய்வதற்கான நேரத்தை நிர்ணயித்து அதனைச் செயல்படுத்தினால் தான் அதன் பலன் கிடைக்கும். நம் செயல்கள் தான் நம் எதிர்காலத்தை உருவாக்குகின்றன. எதிர்பார்த்த மாற்றங்கள் நம் வாழ்வில் ஏற்படும். இதைத்தான் செயல்சார்ந்த மன மாற்றம் என்கிறோம்.

### முதலில் சுயம் மாற்றம்: (Self First Mind Shift)

நாம் அனைவரும் நமது குடும்பத்திற்காகவும், நமை சார்ந்து உள்ளவர்களுக்காகவும், சமூக நலனுக்காகவும், பல விதமான காரியங்களை செய்கிறோம். சில மனிதர்கள் குடும்பத்திற்காக உள்ள நாட்டிற்காக, வெளிநாட்டிற்கே சென்று வேலை செய்கிறோம். இப்படிச் செய்யும் வேலை அனைத்தும் பணம் சம்பாதிப்பதற்காகவும், தன் (சுயம்) தன்னலுக்காகவும், தமது உடல் ஆரோக்கியத்தைப் பற்றியும், பெற்றோர்களான மக்களின் சிந்தனைதான் இல்லாமல் செய்வார்கள். சுயமாற்றம் என்பது, தன்னைத்தான் முழுமையாக அறிந்து, தன் உடல் ஆரோக்கியத்தின் மீது கவனம் கொண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதை அன்றாட பணி செய்யவேண்டும் என்பதுதான். ஒருவர் ஆரோக்கியமாக இருந்தால்தான் சிந்தனை வலைய முடியும். ஒருவர் ஆரோக்கியமாக உடல் நிலையில் இருக்கும்போது பிள்ளைத்தோடு மட்டும் இல்லாமல் எண்ணிய காரியத்தை குடும்பத்திற்காக செய்ய முடியும்.

### நிகழ்காலத்தில் கவனம் செலுத்தும் மன மாற்றம் (Present Moment Mind Shift)

பெரும்பாலானோர் தங்களது சந்தோஷத்தை கடந்த கால சப்பான நிலைகளாலும், எதிர் காலத்தை பற்றிய பயத்தாலும், தங்களுக்கு கிடைக்கக்கூடிய சந்தோஷத்தை இழந்துகொள்கிறார்கள். நாம் எப்போதும் சந்தோஷமாக இருந்தால் நிகழ்காலத்தில் கவனம் செலுத்தக் கூடிய மன மாற்றத்தை உங்களுக்குள் நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் தான் ஒவ்வொரு நாளும், நாம் ஆனந்தத்தை உணர முடியும்.

### தனி மனித பொறுப்புக்கான மன மாற்றம் (Personal Responsibility Mind Shift)

உன்னை மாற்றி, உலகத்தை மாற்று. ஒவ்வொரு மனிதனுக்கும், குடும்பம் சமுதாயமான மற்றும் சமூக நிலவுக் காகவும், ஓர் சில பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதுண்டு. நாம் நற்பண்புகளை தேவையானபடி பூர்த்தி செய்தல், குடும்பத்திற்காகவும் சமூகத்திற்காகவும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளக் கடவன். சுற்றும் சூழலைக் கவனித்தல், போற்றும் பொறுப்புண்டு உண்டு. ஒரு தனி மனிதன், நல்ல மனநிலையும், நல்ல எண்ணங்களும், தன்னடக்கமும், இப்படி பல விஷயங்கள் காரியங்களில் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏற்றுக்கொண்டு பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பது உள்ளது. உதாரணமாக அரசின் விதிகளை பின்பற்றுதல், செய்யத் தேவையான விஷயங்களை சரியான நேரத்தில் செய்தல், குடும்பத்தை அதற்கான இடத்தில் பாதுகாத்தல், பொதுஇடங்களில் மற்றவர்களுக்கு தொந்தரவு வராத படி நடந்து கொள்வது போன்ற சமூகப் பொறுப்புகளை ஒவ்வொருவரும் தனி மனிதனும் ஏற்றுக் கொண்டால் அதற்கே அவர்தான் என்கிற தனி மனித மன மாற்றம் ஆகும்.

### வாழ்க்கையின் ஈடுபாட்டுக்கான மன மாற்றம் (Life Engagement Mind Shift)

நாம் ஒவ்வொருவரும் புதிய அனுபவங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஆர்வம் (Interest) வேண்டும். அந்த ஆர்வத்துடன், அந்த வாழ்க்கையின் செயல்பாட்டில் ஈடுபடுதல் (Involvement) வேண்டும். அந்த ஈடுபாட்டால், அந்த வாழ்க்கையை அனுபவிக்கலாம். ஒருவர் எந்தவொரு செயலிலும் ஈடுபட்டாலும் அது அனுபவமாகவும், அதனால் வாழ்க்கை மேலும் சிறப்பாகவும் அமையும். வெற்றியாளராக மாற விரும்பும் ஒருவர் இந்த மன மாற்றத்தை நடைமுறைப்படுத்தினால் வாழ்வு வெற்றியாக அமையும் என்கிறார் லயன் வைப்ரேஷன் வீரா.

"பல்முக திறமை கொண்ட லயன் வைப்ரேஷன் வீரா"வை தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும், குடும்பம் உறவினர்கள் தங்கள் மன அழுத்தம் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுக்கும் பயன் பெற்றுக் கொள்ளக்கூடுமென்று அவர் தெரிவித்துப் உள்ளார். இவரது தொடர்பு எண்: 88382 08603 (வாட்ஸ் ஆப் எண்), 96773 73067 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

www.vibrationveera.in என்ற வெப் சைட்டிலும் பார்த்துக் கொள்ளலாம்

---



● வ.உ.சிதம்பரனாரின் 154-வது பிறந்த நாள் ஒட்டி கோவை மத்திய சிறையில் உள்ள அவர் இழுத்த செக்கிற்கு அ.தி.மு.க சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் காட்டூர் செல்வராஜ், இரா.செந்தில் வேல், பாலமுரளி, கமலக்கண்ணன், ஹரிஹரன், கிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆதித்யா இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான அறிமுக விழா

● கோவை

ஆதித்யா இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான அறிமுக விழா சமீபத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில் நிறுவனத்தின் தலைவர் சுகுமாரன், செயலாளர் பிரவீன் குமார், அறங்காவலர்– தலைவர் மற்றும் முதல்வர் சோமசுந்தரேஸ்வரி, இயக்குநர் ஜோசப் வி. தனிக்கல், டீன் ஐ.ராஜேந்திரன் மற்றும் துறைத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக் கொண்டனர்.சென்னையைச் சேர்ந்த CHRO தலைமை அதிகாரி மற்றும் மென்பொருள் பொறியாளர் சசிகாந்த் ஜெயராமன் இந்த நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராகப் பங்கேற்று, கல்வியின் முக்கியத்துவம், இந்தியாவின் உலகளாவிய தலைமைத்துவத்தில் கணினியின் பங்கு மற்றும் அவரது தொழில்முறை பயணத்திலிருந்து பெற்ற பாடங்களை எடுத்துரைக்கும் ஒரு ஊக்கமளிக்கும் முக்கிய உரையை நிகழ்த்தினார்.




---

# நிர்மலா மகளிர் கல்லூரியில் வேலைவாய்ப்பு கருத்தரங்கம் !




● கோவை

நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர், தனது தொழில் வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்புக் குழு (Career Guidance and Placement Cell) மூலம் மனிதவள கருத்தரங்கு (HR Conclave - 2025) நிகழ்வை செப்டம்பர் 12–ம் தேதி சிறப்பாக நடத்தியது. கல்வி மற்றும் தொழில் உலகை இணைக்கும் வகையில் இந்த கருத்தரங்கு பல முன்னணி நிறுவனங்களின் மனிதவள (HR) தலைவர்களையும் தொழில் நிபுணர்களையும் ஒருங்கிணைத்தது.

திரு. ஷாஜி தாமஸ், மேலாண்மை இயக்குநர் - குளோபல் லீட் பிசினஸ் ரிஸ்க் மேனேஜ்மெண்ட், ஸ்டேட் ஸ்ட்ரீட் முக்கிய உரையாற்றி, மனிதவள மேலாண்மையில் உருவாகும் புதிய போக்குகள் மற்றும் மாணவிகள் உலகளாவிய தொழில் வாய்ப்புகளுக்குத் தயாராக வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

கல்லூரியிலிருந்து நிறுவனம் ("Campus to Corporate") மற்றும் வெற்றிகரமான சுயவிவரம் உருவாக்குதல் ("Crafting Winning Resume") என்ற தலைப்புகளில் இரண்டு விவாதக் குழு உரையாடல்கள் நடைபெற்றன. டெலாய்ட், காக்னிசன்ட், விப்ரோ, தி சென்னை மொபைல்ஸ், சிம்டா குழுமம், மற்றும் ஓம்னிகோம் குரூப் போன்ற முன்னணி நிறுவனங்களின் மனித வள நிபுணர்கள் பங்கேற்று தங்களது அனுபவங்களையும் வழிகாட்டுதல் களையும் பகிர்ந்து கொண்டனர்.

மாணவிகள் தொழில் உலகின் எதிர்பார்ப்புகள், வேலைவாய்ப்பு திறன்கள் மற்றும் சுயவிவர மேம்பாட்டிற் கான நடைமுறை அறிவை பெற்றதோடு, எதிர்கால பணியாளர் தேர்வுகளை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் உறுதியையும் பெற்றனர். கேள்வி–பதில் அமர்வுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

கல்லூரி செயலர் அருட்சகோதரி டாக்டர். குழந்தை தெரஸ் அவர்கள், தலைமை விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியைத் தொடக்க உரையால் சிறப்பித்தார். கல்லூரி முதல்வர் அருட்சகோதரி. டாக்டர். மேரி ஃபேபியோலா அவர்கள், வாழ்த்துரையாற்றி, நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்த குழுவினரின் முயற்சியை பாராட்டினார். பிளேஸ் மெண்ட் ஆபிசர் டாக்டர் நித்யா, நிகழ்வை வெற்றிகரமாக ஒருங்கிணைத்து, மாணவிகளையும் தொழில் நிபுணர் களையும் இணைக்கும் பாலமாக செயல்பட்டார்.





பொறுப்பல்ல : இந்த செய்தித்தாளில் பிரசுரம் ஆகி உள்ள விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள்/ சேவைகள் அடிப்படையில் செயல்படும்முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக் கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள்/ சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்த செய்தித்தாளின் உரிமையாளரும், பதிப்பாளர்களுக்கும் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின் மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர் பதிப்பாளர் அச்சிடுவோர் ஆசிரியர் இயக்குனர்கள் ஊழியர்கள் ஆகியோர் எந்த சூழலிலும் எந்த வகையிலும் அதற்கு பொறுப்பாக மாட்டார்கள். படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்பவும் பிரசுரம் ஆகாதவற்றை திரும்ப அனுப்ப இயலாது.


# நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரிக்கு சிறந்த கல்வி நிறுவனத்துக்கான விருது!



● பொள்ளாச்சி

பொள்ளாச்சியை சேர்ந்த நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி, சிறந்த உள் கட்டமைப்பு வசதி, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள். சிறந்த கற்றல் கற்பித்தல் முறை, தேசிய தரச்சான்றிதல் பெற்ற பட்டய பாடப்பிரிவுகள் போன்ற அம்சங்களுக்காக. தேசிய அளவில் சிறந்த கல்வி நிறுவனமாக (2024–2025) தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சண்டிகர் (NITTTR) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளது. என்.ஐ.ஏ. கல்வி நிறுவ னங்களின் கீழ் செயல்படும் இந்த நிறுவனம், இந்த விருதை தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 58 வது ஆண்டு விழாவில் பெற்றுக்கொண்டது. நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியின் சார்பில் என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.வி. சுப்பிரமணியன், கல்லூரி முதல்வர் ம.அசோக் மற்றும் விரிவுரையாளர் G.கதிரேஸ்குமார் பெற்றுக் கொண்டனர். கல்லூரியின் ஆட்சிமன்ற குழுத்தலைவர் ம.மாணிக்கம் மற்றும் தலைவர் மா.ஹரிஹரசுதன் ஆகியோர் இச்சாதனைக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.






Published by C Sathish Kumar on behalf of C Sathish Kumar, Printed by EXPRESS PRESS, at Coimbatore and published at NO.3, 3rd Street Thiruvalluvar Nagar Ramanathapuram, Coimbatore-641045. Editor : C Sathish Kumar.